# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் - 8

# விசுவாசம்

பாகம் - 1



Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## விசுவாசம் பாகம் - 1



இன்று நாம் பார்க்கவிருக்கும் பாடம் '**விசுவாசம்**" ஆகும். **விசுவாசம்** என்பதை அனைவரும் அவரவருடைய அன்றாட வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் செயல்படுத்தி வருகின்றோம்.

உதாரணமாக,

- ஒரு மாதம் வேலைசெய்த பிறகு. அந்த மாதத்தின் முடிவில் ஊதியம் கிடைக்கும் என்று ஒருவர் விசுவாசிக்கிறார்.
- வேறொருவர் வங்கியில் செலுத்தின பணம் பத்திரமாக இருக்கும் என்று விசுவாசிக்கிறார்

அப்படியே ஆவிக்குரிய அநேக விதமான விசுவாசங்கள் உண்டு. மேலும் இது ஒவ்வொரு மனிதரிடத்திலும் வித்தியாசப்படுகிறது.

- உதாரணமாக இந்து மதத்தைச் சேர்ந்தவருக்கு அவருடைய விக்கிரகங்கள், பூஜைகள் மற்றும் அன்றாட சடங்குகள் மேல் நம்பிக்கை உண்டு. புனித நதிகளில் நீராடினால் தங்களது பூர்வ பாவங்கள் நீங்கும் என்பதும், புனித ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு. தலைமுடியை நேர்த்திக் கடனாக செலுத்தினால் ஆசீர்வாதம் கிடைக்கும் என்பதும் அவர்களது விசுவாசமாயிருக்கிறது. இன்னும் ஏராளமான விசுவாசம் நம் இந்து சகோதரர்கள் மத்தியில் இருக்கிறதை அறிவோம்.

- அதுபோலவே, இஸ்லாமியர்களும் ஒருவிதமான நறுமணத் தூளை நீரில் கலந்து குளிப்பதினால், தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்று நம்புகிறார்கள். இது அவர்களுடைய விசுவாசமாயிருக்கிறது.

- புத்தமதத்தைச் சேர்ந்த ஒருவர் மறுஜென்மத்தில் நம்பிக்கை வைக்கிறார். அதன்படி அவர் மரித்தாலும் மீண்டும் இந்த உலகத்தில் பிறப்போம் என்று நம்புகிறார். இவ்வாறு முக்தி அடைவதை, 'நிர்வாணா" என்று அழைக்கிறார்கள்(மறு ஜென்மத்திலிருந்து விடுதலை). இது அவர்களுடைய விசுவாசமாயிருக்கிறது.

கிறிஸ்தவர்களிலும் அநேக விதமான விசுவாசங்கள் உண்டு. ரோமன் கத்தோலிக்க சபையாருக்கென்று ஒரு விசுவாசம்... பெந்தெகொஸ்தே சபையாருக்கென்று ஒரு விசுவாசம் இருக்கிறது. ஏறத்தாழ 1500க்கும் மேற்பட்ட பிரிவுகளில், பலதரப்பட்ட விசுவாசங்கள் நமது கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கிறதை அறிவோம்.

இப்படியாக இந்த உலகத்தில் விசுவாசத்திற்கு அநேக உதாரணங்களைக் கூறலாம். இப்பொழுது நாம் ஒரு கேள்விக்கு வருவோம்.

**உண்மையில் விசுவாசம் என்பதன் பொருள் என்ன?**

இதைக்குறித்து , வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்கும்பொழுது,

**எபிரேயர் 11:1 இல் - 'விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது"**

அதாவது, காணக்கூடாத காரியங்களை முழு உறுதியோடு நம்புவதே விசுவாசம் என்பதாகும். இப்படியாக விசுவாசத்தை நாம் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**1. இரட்சிப்பின் விசுவாசம்** - இது பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுதலை பெறுவதற்கு எல்லா ஜனங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள இரட்சிப்பு பற்றின விசுவாசம் ஆகும். அதை வேதாகமத்தில் நாம் பார்க்கலாம்.

**யோவான் 3:16-'தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"** .

**2. அனுதின விசுவாசம் -** இது நம்முடைய அன்றாட பாதுகாப்பு, வழிநடத்துதல் மற்றும் தேவைகளும் நிறைவேற்றப்படும் என்கிற விசுவாசம். அதை நம்முடைய வேதாகமத்தில் நாம் பார்க்கலாம்.

**மத் 6:11 -'எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்"**

**3. உபதேச அடிப்படையிலான உபதேசம்** - ஒவ்வொரு மதத்திலும் உபதேசத்தின் அடிப்படையிலான விசுவாசம் அநேகம் உள்ளது. இதில் கிறிஸ்தவர்களும் உபதேசங்களின் அடிப்படையிலான விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இப்படி மூன்று விதமான விசுவாசங்கள் அனைத்து ஜனங்களுடைய அன்றாட வாழ்க்கையில் இருப்பதை நாம் காண்கிறோம்.

இப்பொழுது நாம் இவைகளிலிருந்து வேறுபட்ட, அதே சமயத்தில் விசேஷமான விசுவாசத்தைப்பற்றி பார்ப்போம். இது வேதாகமத்தில் யூதாவின் நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

**யூதா 20 - 'நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு.."**

ஆம். இங்கு 'மகா பரிசுத்தமான விசுவாசம்" என்று குறிக்கப்பட்டிருப்பதை காண்கிறோம். நாம் இதைக்குறித்து எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறோமா? விசுவாசத்திற்கும் மகா பரிசுத்தமான

விசுவாசத்திற்கும் மகா பரிசுத்தமான விசுவாசத்திற்கும் பெரிய அளவில் வித்தியாசமுள்ளது. மகா பரிசுத்தமான விசுவாசம் என்பது தேவனால் தேவனுடைய வார்த்தையிலிருந்து வரக்கூடிய துப்புரவான உபதேசமாகும். இன்னும் சொல்லப்போனால், அந்த விசுவாசம் உண்மை சத்தியத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும்.



இங்கு கூறப்பட்ட 'மகா பரிசுத்தமான விசுவாசம் என்பது எதைக்குறிக்கிறது? மேலும் அதை உறுதிப்படுத்துவது என்பதன் பொருள் என்ன? உதாரணமாக - சூரியன் அன்றாடம் உதிப்பதும், பௌர்ணமி. அமாவாசை ஏற்படுவதும் சந்தேகத்திற்கிடமின்றி நம்பக்கூடியது. முதலில் இது யாருக்காக கொடுக்கப்பட்டது என்று பார்க்கும்பொழுது,

**யூதா 3 - 'பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று..."**

இந்த **'மகா பரிசுத்தமான விசுவாசம்"** என்பது **'பரிசுத்தவான்களுக்கு" இயேசுகிறிஸ்துவால்** ஒப்புவிக்கப்பட்டது என்று அறிகிறோம். மேலும் மகா பரிசுத்தமான விசுவாசம் என்பது கண்டிப்பாக நடந்தேறும் விஷயங்களின்மேல் வைக்கும் நம்பிக்கைஆகும்

பரிசுத்தவான்கள் யார்? இது குறித்து பின்வரும் வகுப்புகளில் தெளிவாக ஆராயலாம். ஆனால் பரிசுத்தவான்கள் என்பவர்கள் இவ்விடத்தில் இயேசுவின் சீஷர்களையே குறிக்கின்றனர். சீஷர்களுக்கு விசேஷமான சில அதிகாரங்களை இயேசு தந்துசென்றார். உதாரணமாக,

**மத்தேயு 16:18-19 'மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன், பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்"**

இதன் பொருள் என்ன? அதாவது சீஷர்கள் பூலோகத்தில் சில கட்டுப்பாடுகளை விதித்தால் அது பரலோகத்தில் தேவனால் இடப்பட்ட கட்டளையாக எண்ணப்படும். அதுபோலவே பூலோகத்தில் ஏற்கனவே இருக்கும் கட்டுப்பாடுகளில் ஏதாவதொன்றை சீஷர்கள் நீக்கினால் அது பரலோகத்திலும் தேவனால் நீக்கப்பட்டது போன்றதாகும்.

உதாரணமாக :- அப்.பவுல் ஒரு கட்டுப்பாடு பற்றி பேசுகிறார். அதாவது

**1தீமோத்தேயு 2:11-13-'ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக் கடவள். உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்கவேண்டும்"** .



எனும்போது ஸ்திரீகள் அடிமைகள்போல இருக்கவேண்டுமா?

**1கொரிந் 14:34 "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்".**

என்றால், சபையில் உபதேசம் மட்டும் பண்ணத் தடைபண்ணுகிறார். ஆனால் தனிப்பட்ட ஊழியங்கள் செய்வதற்கு தடைசெய்யவில்லை என்பதை **1கொரிந்தியர் 11:5,13** கூறுகிறது :


**'ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப் படுத்துகிறாள்... ஸ்திரீயானவள் தேவனைநோக்கி ஜெபம்பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக்குமோ..."**

பூலோகத்தில் கட்டவிழ்த்தல் என்றால் என்ன?

தேவன் நியாயப்பிரமாணத்தில் சில மிருகங்களின் மாம்சம் புசிக்கவேண்டாம் என கட்டளை கொடுத்திருந்தார். ஆனால் அப்.பவுல் **1தீமோத் 4:4** இல்,

**'தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத் தக்கதல்ல"**

அப்போஸ்தலர்கள் இவ்வாறு கூறினாலும் அது தேவனே கூறுவதுபோலாகும் . இதுபோல அநேக உதாரணங்களை பின்பு ஆராயலாம்.



மேலும், மகா பரிசுத்தமான விசுவாசம் என்பது ' கிருபையும், சத்தியமும்" என்று குறிப்பிடப்படுகிறது :

**யோவான்1:17-'கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக உண்டாயின"**

ஆம். மேலும் இயேசுவின் மூலமாக 'கிருபையும் சத்தியமும்" வந்ததைக்குறித்து வசனங்களை வாசிக்கலாம்.

**எபி 1:2- இந்த கடைசி நாட்களில் குமாரன்மூலமாய் நமக்குத்திருவுளம்பற்றினார்**

ஆக, இயேசுவின் மூலமாக நமக்குக் கிடைத்த 'கிருபையும், சத்தியமும்" தேவனுடைய வார்த்தைகளே. இவர் பிதாவின் வார்த்தைகளையே பேசினார் என்று நாம் கீழுள்ள வசனத்தை வாசித்து அறிந்துகொள்ளலாம்.

**யோவான்3:34-தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசினார்**

ஆம். இயேசு பேசின வார்த்தைகள் தேவனுடையதே என்று தெளிவாகத் தெரிகிறது. ஆகிலும் அந்த கிருபையும் சத்தியமும் என்ன என்று ஆராயும்பொழுது...

**யோவான் 17:17 - 'உம்முடைய வசனமே சத்தியம்"**

அதன்படி, தேவனுடைய வசனங்களை சத்தியமாக இருக்கிறது என்றும், இந்த சத்தியத்தையே இயேசு சீடர்களுக்குப் போதித்தார் என்றும், இந்த சத்தியத்தின் அல்லது வசனத்தின் அடிப்படையில் கொண்ட விசுவாசமே மகா பரிசுத்தமான விசுவாசம் என்றும் அறிகிறோம்.

ஆகவே, வேதாகமத்தில் எழுதியிருக்கிறபடி தேவனுடைய வார்த்தைகள் அல்லது, அவருடைய

சத்தியங்கள்மேல் வைக்கக்கூடிய விசுவாசமே மகா பரிசுத்த விசுவாசம் ஆகும்.

ஆனால் உலகில் இன்று குறைவானவர்களே சத்தியத்தை ஆர்வத்துடன் தேடுகிறார்கள். மேலும், அநேகர் சத்தியம் என்று வேற்றுமையான போதனைகளை போதிக்கிறார்கள். ஆனால் 'இதுவே சத்தியம்" என்கிற மெலிதான சத்தத்தை தேவனுடைய வார்த்தையின்மூலம் மாத்திரம் உணரப்படும்.

இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?அதாவது நீங்கள் வேதாகமத்தை சத்தியம் என்று விசுவாசிக்கிறீர்களா? இவை தேவனுடைய வார்த்தைகள் என்று விசுவாசிக்கக்கூடிய ஜனங்களுக்கு, தேவன் தம்முடைய வார்த்தைகளை எவ்வளவு அழகாக வெளிப்படுத்துகிறார் என்பதை கீழ்க்கண்ட வசனத்தில் அறியலாம்:

**எபிரேயர் 1:1,2 - பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்.."**

ஆம் இதுவே தேவன் தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்தின முறையாகும்.

**பூர்வகாலம்** - இது பழைய ஏற்பாட்டின் காலத்தைக் குறிக்கும்.

**பங்கு பங்காக** - இது பழைய ஏற்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 1600 வருடங்களைக் குறிப்பதாகும்.

**வகைவகையாக** - இது தீர்க்கதரிசிகள் மற்றும் தூதர்கள் மூலமாக சொல்லப்பட்ட **தீர்க்கதரிசனங்களும், அடையாளங்களும், நிழல்களும்** ஆகும்.

**கடைசி நாட்கள்** - இது புதிய ஏற்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தைக் குறிப்பதாகும். இது யூதயுகத்தின் முடிவாகிய 100 வருடங்கள் நீடித்திருந்தது.

**அவருடைய குமாரன்** - இது இயேசு அவருடைய 12 அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தி அவர்கள் நமக்காக எழுதிவைத்த அவருடைய வார்த்தைகளாகும்.

இப்படியாக தேவனுடைய வார்த்தைகள் 66 புத்தகங்களாக ஆதியாகமத்தில் தொடங்கி, வெளிப்படுத்தின விசேஷத்தில் முடிவடைகிறது. இதை கீழ்வரும் வசனத்தின் மூலம் உறுதிப்படுத்தலாம்.

**வெளி 22:18,19 - 'ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார்".**

ஆம் இது தேவனுடைய வார்த்தைகளில் கூட்டுபவர்களுக்கும் குறைப்பவர்களுக்கும் எச்சரிப்பாக தேவன் கொடுத்த கட்டளையாக இருக்கிறது. மேலும், சில கிறிஸ்தவர்கள் நினைப்பதுபோல் வேதாகமத்தில் சேர்க்கவேண்டிய புஸ்தகங்கள் என்று வேறெதுவுமில்லை(உபா 12:32, நீதி 30:6).

இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுலும்,கீழுள்ள வசனத்தில் குறிப்பிடுகிறார்

**அப்போஸ்தலர் 20:26 - தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நாம் மறைத்துவைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே..."**

**'எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே"** என்று பவுல் குறிப்பிடுகிறார். ஆம் இப்படிப்பட்ட கண்டிப்பான கட்டளைகள் இருக்கிறபடியால் நமக்குள் எழுகிற கேள்வி என்னவெனில், நம் கையில் வைத்திருக்கும் வேதாகமத்தில், வசனங்கள் சேர்க்கப்படுவதும், எடுக்கப்படுவதும் தவிர்க்கப்பட்டுள்ளதா? என்பதே.

**..இல்லை..** என்பதே இந்த கேள்விக்கான பதில். நம்முடைய வேதாகமத்தில் இரண்டு பகுதிகள் **சேர்க்கப்பட்டிருக்கிறது** என்று **"NIV"**மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய கையில் இருக்கும் வேதாகமம் 'கைப்பிரதிகளில்" இருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. 'கைப்பிரதிகளில்" என்றால் என்ன?



அச்சு எந்திரங்கள் கண்டுபிடிக்கும் முன்பு வேதாகமத்தை ஆடு மாடுகளின் தோல்களில் கையால் எழுதினார்கள். இவைகளை **'தோல்சுருள்"** என்று அழைத்தார்கள். இவை அன்றாட உபயோகத்தின்மூலம் சுமார் 50 - 60 வருடங்களுக்கு பின்பு பழையதாகும். ஆகவே முழு வேதாகமத்தையும் மீண்டுமான எழுதவேண்டியது அவசியமாக இருந்தது. எத்தனை உழைப்பு என்று சிந்தித்துப் பாருங்கள்.

இப்படியாக வேதாகமம் 1400 வருடங்களுக்குள் பலமுறைகள் எழுதப்பட்டும் திருத்தி எழுதப்பட்டும் இப்படி கைகளால் எழுதப்படடிருக்கும் பிரதிகள்'கைப்பிரதிகளில்" என்று அழைக்கப்பட்டது. இதை சுருக்கமாக **"MSS"**மூலப்பிரதிகள் என்று அழைப்பார்கள்.

எடுத்துக்காட்டாக **"Syriac MSS", Vatican MSS"etc.** நம் கையில் இருக்கும்**KING JAMES VERSION(KJV)** 1611ஆம் வருடத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாக்கப்பட்டது. இது 16ஆம் நூற்றாண்டின் கைப்பிரதிகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது. 1940ஆம் வருடத்தில் சவக்கடலுக்கு அருகே உள்ள கும்ரான் உப்புக் குகைகளில் இருந்து இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட தோல் சுருள்கள் கண்டுபிடிக்கப்பட்டது.





சுமார் 1500 வருடங்களுக்கு மேலாக இந்தத் தோல் சுருள்கள் உப்பால் பதப்படுத்தப்பட்டு அற்புதமாக பாதுகாக்கப்பட்டிருந்திருக்கிறது. இந்தக் கைப்பிரதிகளில் இருந்து, ஆங்கிலத்தில் அழைக்கப்படும் **"New International version(NIV)"** என்ற ஆங்கில வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பின் மூலமாக அநேக வார்த்தைகள், வசனங்கள் வேதாகமம் எழுதினதற்குப்பின்பு சேர்க்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தார்கள். அப்படி வேதாகமத்தில் சேர்க்கப்பட்ட இரண்டு பெரிய பகுதிகள் எவையென்றால், **மாற்கு 16:9-20, யோவான் 7:53 - 8:11.**

**"NIV"**மொழிபெயர்ப்பின் ஒவ்வொரு பக்கத்தின் கீழுள்ள குறிப்புகளில் இந்த உண்மைகள்

நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதில் நாம் கவனமாக இருக்கவேண்டும். அநேக மொழிபெயர்ப்புகளை வெவ்வேறு மொழிகளில் ஆராய்ந்துபார்க்கவேண்டும். அதன்படி நம்முடைய வேதாகமப் பாடத்திற்குத் தேவைப்படுகிற இரண்டு முக்கியமான மொழிபெயர்ப்புகள் எவையென்றால்,


1. **"KING JAMES VERSION(KJV)"** (பழைய மொழிபெயர்ப்பு)
2. **"NEW INTERNATIONAL VERSION(NIV)"** (புதிய மொழிபெயர்ப்பு)

தேவனுடைய உண்மையான வார்த்தைகளின்மேலும் அதனுடைய வெளிப்பாடுகளின்மேலும் இருக்கும் நம்முடைய விசுவாசமே **'மகா பரிசுத்தமான விசுவாசம்"**

ஆதிகால சபைகளில், அவர்கள் விசுவாசித்த அனைத்து சத்தியங்களும் வேதாகமத்தில் இருந்ததா என்று ஆராய்ந்துபார்ப்பதில் மிக கவனமுள்ளவர்களாக இருந்தார்கள். இதைக்குறித்து நாம் பெரேயா பட்டணத்தாரைப்பற்றி வாசிக்கும்போது,

**அப்போஸ்தலர் 17:11** இல்,

**'அந்தப் பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்"**



இந்த பட்டணத்தார் பவுலின் மூலமாக கேட்ட ஒவ்வொரு சத்தியங்களையும் வேதத்தில் உள்ளதா என்று ஆராய்ந்துபார்த்தார்கள். இவர்களைக் குறித்து அப்போஸ்தலராகிய பவுல் கூறும்போது, 'நற்குணசாலிகள்" என்று குறிப்பிடுகிறார். நாமும் இந்த பெரேயா பட்டணத்தினரைப்போல இருந்து மகா பரிசுத்தமான விசுவாசத்தில் நிலைத்து தேவனுக்குப் பிரியமாக இருப்போம்.

நமக்கு எப்பேர்ப்பட்ட விசுவாசம் இருக்கிறது? இது வெறும் விசுவாசமா அல்லது 'மகா பரிசுத்தமான விசுவாசமா?" இந்தக் கேள்விகளுக்கு பதில் முக்கியத்துவம் வாய்ந்ததா? ஆம். முக்கியத்துவம் வாய்ந்தது தான். ஏனென்றால் நாம் தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கிறபடி

**'உமது வசனமே சத்தியம்"**

மேலும் விசுவாசமானது தேவனுடைய வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டிராவிட்டால் அது அசத்தியம் ஆகும். அல்லது தேவனுடையதாய் இருக்காது. இதைக்குறித்து வேத வசனங்களை வாசிப்போம்.

**1தீமோத்தேயு 4:1 - '..பிற்காலங்களிலே மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்"**

ஆம், வேத வார்த்தைகளின்படி கொண்டிராத விசுவாசம் சாத்தானுடையதாக இருக்கிறது.

அவனைப்பற்றி நாம் வாசிக்கும்பொழுது

**யோவான் 8:44 - அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான். சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான்"**

ஆகவே நம்முடைய நம்பிக்கை எப்படிப்பட்டது என்று சோதித்துப்பார்ப்பது மிக அவசியமாகிறது. நம்முடைய விசுவாசம் '**மகா பரிசுத்தமான விசுவாசமா?** அல்லது வெறும் **விசுவாசமா?** "

நாம் கீழுள்ள காரியங்களைக் குறித்து எப்படிப்பட்ட விசுவாசம் கொண்டிருக்கிறோம்...

**1. ஆத்துமாவும் அதைக் குறித்த உபதேசங்கள்-** ஆத்துமா அழியாததா? அது மரிக்குமா? ஆத்துமா என்றால் என்ன? எல்லா மதங்களும் போதித்துவரும் ஆத்துமாவைப் பற்றி வேதம் என்ன சொல்லுகிறது?

**2. நரகம் என்றால் என்ன?** இந்துக்களுடைய எமலோகமும், வேதாகமத்தில் சொல்லப்படும் நரகமும் ஒன்றா? நீங்கள் நரகத்தில் மரிக்கமுடியுமா? நரகத்தைப் பற்றின சத்தியம் என்ன?

**3. திருத்துவமும் மூன்ற தெய்வங்களும் ஒன்று** என்ற 'இரகசியத்தை எப்படி புரிந்துகொள்ளுவது? தேவனைப்பற்றி ஒருவரும் அறியமுடியாதா?"

**4. அந்திக்கிறிஸ்து 666** - யார் இந்த அந்திகிறிஸ்து? அவர் தனிப்பட்ட நபரா?

**5. வேதாகமத்தின் காலக்கணக்கும்,** ஆதாமின் படைப்பிலிருந்து இன்றுவரையிலான காலத்தை படித்தல். மனிதன் எத்தனை ஆண்டுகளாக இந்த பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிறான்? இவை விஞ்ஞானிகள் கற்றுக்கொடுத்தபடி பல கோடி ஆண்டுகள் உடையதா?

**6. எதிராளியாகிய சாத்தான்** - மிக அசிங்கமானவனா? அவன் அழியா வரம்பெற்றவனா? அவன் மரிக்கமுடியுமா? அவனுக்குக் கொடுக்கப்பட்ட வல்லமை எப்படிப்பட்டது?

**7. நம்முடைய ஆண்டவருடைய இரண்டாம் வருகை** நம்முடைய ஆண்டவர் எப்பொழுது வருவார் என்று யாருக்காவது தெரியுமா?

**8. சபையும் அதில் உள்ள அநேக அமைப்புகளும் எப்படி வந்தது?**எல்லாரும் இயேசுவின் சபையில் அங்கத்தினர்களா? அப்படியானால் கீழுள்ள வசனத்தில் உள்ளபடி அனைவருக்குள்ளும் ஒற்றுமை காணப்படாதிருக்கும் காரணம் என்ன?

**எபேசியர் 4"3-6- 'ஒரே சரீரம்", 'ஒரே ஞானஸ்நானம்" 'ஒரே அழைப்பு"**

**9. தேவனுடைய ராஜ்ஜியம் என்றால் என்ன?** இது உண்மையா? இது பூமியில் ஸ்தாபிக்கப்படுமா? அல்லது பரலோகத்தில் மட்டும் ஸ்தாபிக்கப்படுமா? ... இன்னும் அநேக காரியங்கள் உள்ளது.

இவைகளைப்பற்றிய நம்முடைய நம்பிக்கை, தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் உள்ளதா? நம்முடைய விசுவாசம் வெறும் விசுவாசம் மட்டுமா.. அல்லது 'மகா பரிசுத்தமுள்ள விசுவாசமா?"

இதை முதலில் நாம் நிச்சயித்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், வசனத்தில் எழுதியிருக்கிறபடி **'.. உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உறுதிப்படுத்திக்கொண்டு.."**

நாம் இப்படியாக வேதத்தை அறியக்கூடிய ஞானத்திலும் அவர்மேல் வைக்கும் விசுவாசத்திலும் வளரவேண்டும் என்பதை இந்த வசனம் வலியுறுத்துகிறது. வேதாகமத்தைக் கற்றுக்கொள்வதும், வேதத்தை அறியக்கூடிய ஞானத்தைப் பெறுவதும் தொடர்ச்சியான ஒரு செயலாகும். இதை மிக பொறுமையோடு நாம் மேற்கொள்ளவேண்டும்.

இதுவே 'நீங்கள் விசுவாசத்தில் உறுதிப்படுவதாகும்"

இதைக்குறித்து நம்முடைய ஆண்டவரும் நமக்குக் கொடுக்கும் உறுதிமொழியை வாசிப்போம்.

**யோவான் 8:32 - 'சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம்(தேவனுடைய வார்த்தை) உங்களை விடுதலையாக்கும்"**

இந்த சத்தியம் என்ற தேவனுடைய வார்த்தைகள் தவறுகளில் இருந்தும், மூட நம்பிக்கைகளில் இருந்தும், தவறான போதனைகளில் இருந்தும் நம்மை விடுவிக்கிறது. இவைகள் ஜனங்களை வஞ்சித்து சிக்கவைக்கக்கூடியதாக இருக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தைகளையும் அதில் உள்ள அறிவையும் ஆசீர்வாதத்தையும் குறித்து கீழுள்ள வசனத்தில் வாசிக்கலாம்.

**2தீமோத்தேயு 3:16,17 - 'வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கிறது "**

ஆம். வேத வசனிப்பும் ஞானமும் பின்வரும் காரியங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்

**'நீதியைப் படிப்பிக்குதலுக்கும்"** - தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சரியான வழிகாட்டியாக நம்முடைய வாழ்க்கையின் நடத்தைகளுக்கும் ஜீவனுக்கும் உபயோகமுள்ளதாக இருக்கிறது.

**'உபதேசங்களுக்கு"** - சகல சத்தியங்களையும் அவைகளுடைய பாடங்களையும் வேதாகமத்தில் உள்ளபடி கற்றுக்கொள்ள உதவுகிறது.

**'கடிந்துகொள்ளுதலுக்கும்"** - தவறான நம்பிக்கைகளையும் குற்றங்களையும் வேத வசனத்தின் வெளிச்சத்தின் மூலமாக எடுத்துக்காட்டி, மாறுபாடான போதனைகளையும், உபதேசங்களையும் சுட்டிக்காட்டுகிறதாக இருக்கிறது.

**'சீர்திருத்தலுக்கும்"-** சத்தியத்தின்படி உண்மையான உபதேசங்களையும் காட்டக்கூடியதாக இருக்கிறது.

இவைகளை நாம் புரிந்துகொண்டபின்பு, நமக்கு ஒரு ஆச்சரியமான கேள்வி எழும்புகிறது. இந்த வேதாகமத்தின் அறிவும், மகா பரிசுத்தமுள்ள விசுவாசமும் இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் இவ்வளவு பலவீனமாக இருப்பதற்குக் காரணம் என்ன?இதற்கான பதிலை நாம் வரக்கூடிய 'விசுவாசம் பாகம் இரண்டு" பாடத்தில் படிக்கலாம்.

**தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்.**



**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/biblereserch/